# எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - எயிட்ஸ் சுற்று 09 கூறு- 2012

## 1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டுத் நியமங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல்முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 110,519,936 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 264,207,735 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுகின்றது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் 2012 | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் 2011 | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 31,388,458 | 4,904,438 | 51,888,440 |
| எச்ஐவீ/ எயிட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 79,131,478 | 47,129,044 | 212,319,295 |
| | 110,519,936 | 52,033,482 | 264,207,735 |

## 2.2 காசுப் பாய்ச்சல் கூற்று

(i) இலங்கை கணக்கீட்டு நியம இல. 07 இன்படி, 2011 ஆம் ஆண்டு தொடர்பான நேரொத்த தொகைகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, காசுப்பாய்சல் கூற்று நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது 2012 | 2011 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பய்ச்சல்** | ரூபா | ரூபா |
| வெளிநாட்டு உதவி- மானியம் (வாக்குப்பண பேரேடு-13) மற்றும் வெளிநாட்டு உதவிகள் | 117,000,000 | 44,127,850 |
| தொடர்புபட்ட உள்நாட்டு நிதிகள் (வாக்குப்பண பேரேடு- 17) என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட காசு | 10,000,000 | 872,150 |
| கேள்வியாளர்களிடமிருந்து பெறப்பட்ட காசு | 55,500 | 86,000 |
| நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலுத்தப்பட்ட காசு | (79,131,477) | (47,129,044) |
| வழங்கப்பட்ட முற்பணங்கள் (தேறிய) | (6,860,451) | 10,121,541 |
| செலுத்த வேண்டியவைகளில் குறைவு (பிடித்துவைத்தல் வரி | - | (247,327) |

| | | |
|---|---|---|
| மற்றும் பிடிகாசு) | | |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | 41,063,572 | 7,831,170 |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்கள் | (31,388,458) | (4,904,438) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (31,388,458) | (4,904,438) |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிசை அமைச்சிற்கு மீளளிக்கப்பட்ட காசு (திறைசேரி) | (9,675,114) | (2,926,732) |
| காசில் தேறிய அதிகரிப்பு | இல்லை | இல்லை |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) இல. 371(2)(சீ) | பெறப்பட்ட முற்பணங்கள் எந்த நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 28 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 13,847,323 மொத்தமான முற்பணங்கள் 02 முதல் 10 மாத கால வீச்செல்லைகொண்ட தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) நி.பி- 756 | மீளாய்வாண்டிற்காக ரூபா 51,888,440 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்ஏ/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்க்பபட் வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 25 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

## 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 15,191,113 பெறுமதியான ஆய்வுகூட உபகரணக் கொள்வனவு தொடர்பில் உபகரணங்களின் தேவைகள் மீது வைத்தியசாலைகளால் செய்யப்பட்ட முறையான வேண்டுகை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மார்ச் 03 இல் ரூபா 6,080,000 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட X-Ray இயந்திரங்கள் ஒன்றரை மாத காலத்திற்குப் பின்னர் உரிய வைத்தியசாலைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. ஒன்றரை ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் சொல்லப்பட்ட இயந்திரங்கள் 2013 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு உரிய வைத்தியசாலையால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனி சனல் தாள்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 460,160 இற்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 508,800 தொகைக்காக வழங்கப்பட்ட சொல்லப்பட்ட கட்டளைகளிற்கு மிகையாக ரூபா 48,640 செலுத்தப்பட்டது.

(இ) ரூபா 2,227,456 பெறுமதியான சீடி4 கவுன்ட் றியக்னெட் அட்டைகள் (count Rengent Kits) கொள்வனவு செய்வதற்கு கட்டளை வழங்கப்பட்டது. 6 மாதங்கள் முதல் 1 ஆண்டு வரையான காலம் அந்த உபகரணங்களைப் பெறுவதற்கு எடுத்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) (i) முறையான மதிப்பீடுகள் சமர்ப்பிக்காமல் 7 சந்தர்ப்பங்களில் ரூபா 923,325 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 376,163 அல்லது 40 சதவீதம் மாத்திரமே தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) பெறப்பட்ட ரூபா 554,176 தொகையான முற்பணங்கள் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் 04-06 வரையான மாத காலத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(உ) (i) தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைத் திகதி 2010 யூன் 15 இல் காலாவதியாகியிருந்தது. மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 88,146 தொகையான முற்பணம் 2013 ஒக்தோபர் வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் உடன்படிக்கை காலம் காலாவதியாகும் சமயத்தில் அமைச்சிற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,566,077 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் கணனிகள் 2013 ஒக்தோபர் 31 வரையும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்ட நோக்கங்களிற்காக செலவழிக்காமல் நிதி அமைச்சிற்கு ரூபா 9,675,114 தொகை திருப்பப்பட்டிருந்தது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ரூபா 99,000 பெறுமதியான எம்பீ/பக்ட்/எம்பி/100/எவ்எல்ஏகோன்ஸ் இன் நூறு போத்தல்கள் 2012 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்போத்தல் அங்கொடை தள வைத்தியசாலைக்கு அவசியமற்றவை என்பது அவதானிக்கப்பட்டது. ஆவை திருப்பி அனுப்படப்பட்டிருந்த அதேநேரம் அப்போத்தல்கள் 2013 சனவரி 29 அளவில் காலாவதியாகியிருந்தது.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 08 நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,950,166 மொத்தப் பாதீட்டு ஏற்பாடு குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அங்கீகாரம் இல்லாமல் 12 நடவடிக்கைகளிற்காக பாதீட்டு ஏற்பாட்டை விஞ்சி ரூபா 28,983,685 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது 33 நடவடிக்கைகளிற்காக பாதீட்டில் ரூபா 89,915,206 தொகை ஒதுக்கீ செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 26,908,815 அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 29 % மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வருடாந்த பாதீட்டு ஏற்பாடு இல்லாமல் மீளாய்வாண்டின் போது 10 நடவடிக்கைகளிற்காக ரூபா 12,022,961 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்நிதிகள் பயன்படுத்தலிற்காக பெறப்பட்ட முறையான அனுமதி கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) வருடாந்த பாதீட்டில் உலக எயிட்ஸ் தினத்திற்காக ரூபா 4,604,790 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் ரூபா 760,189 மாத்திரமேயாகும்.

## 5. உள்ளகக் கணககாய்வு

நிதிப்பிரமாணம் 133 இன்படி செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பொருட் கொள்வனவுகள்

(ஆ) இருப்புக்கள்

(இ) நிதிகளைப் பயன்படுத்தல்

(ஈ) கட்டுநிதி மற்றும் முற்பணங்களைத் தீர்த்தல்

(உ) கணக்கீடு